**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 625/2023**

**பி.வா.சா.1 / சவிதா /24.10.2025**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :**

பி.வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த தேதியில் தான் பி.வாசா.ஆ.2 வர்த்தமான லெட்டர் எழுதப்பட்டது என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் என் அப்பா சொத்தை விற்று எனக்கு பணம் கொடுத்தார் என்று சொல்லியுள்ள நிலையில் எந்த சொத்தை விற்றார் எப்போது விற்றார் எவ்வளவு தொகைக்கு விற்றார் என்றால் கவுந்தம்பாடியில் உள்ள சொத்தை 2007 ம் ஆண்டு விற்றார். எவ்வளவு தொகைக்கு விற்றார் என்று எனக்கு தெரியாது. ஆனால், எனக்கு ரூபாய் 6 இலட்சம் கொடுத்தார். என் மாமனார் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.8 கிரய பத்திரத்தில் சொத்தின் மார்க்கெட் மதிப்பு ரூ.10,00,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், நான் ரூ.9,50,000/- க்கு தான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். குறைவான மார்க்கெட் மதிப்பிற்கு தான் மேற்படி சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் பெற்ற பிறகு 2014 ம் ஆண்டில் தான் மின் இணைப்பு பெற்றேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் புதிதாக விண்ணப்பம் செய்து மின் இணைப்பு பெற்றேனோ என்றால் ஆமாம். 2014 ம் ஆண்டு வரை தாவா சொத்து வாதிகள் சுவாதினத்தில் தான் இருந்தது என்றும் அதனால் தான் மின் இணைப்பு 2014 ம் ஆண்டு வரை வாதிகள் பெயரில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. கிரயம் பெற்ற அன்றே நான் சுவாதினம் எடுத்துவிட்டேன். 2012 ம் ஆண்டில் 1 ம் வாதி முனியப்பனின் அண்ணன் முருகன் தாவா சொத்திற்கும் சாலைக்கும் இடையே ஒரு பாலம் கட்டினார் என்று பொதுமக்கள் குன்னத்தூர் பேரூராட்சிக்கு ஆட்சேபனை மனு அளித்தார்கள் என்றும் அதன் பேரில் மேற்படி பாலத்தை இடித்தார்கள் என்றால் அப்படி

இடிக்கவில்லை. மேற்படி பாலம் இன்றளவும் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பாலம் சம்மந்தமாக முருகன் மீது ஒரு குற்ற வழக்கு பதியப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அந்த குற்றவழக்கில் என் மாமனார் 9 வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2014 ம் ஆண்டில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சுவாதினத்திற்கு வந்தவுடன் பெயர் மாற்றம் செய்துவிட்டேன். மேற்படி தாவா சொத்திற்காக பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. 2017 ம் ஆண்டு வரை தாவா சொத்தின் பட்டா வாதிகளின் பெயரில் தான் இருந்தது என்றும் அதனால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2011 ம் ஆண்டு நான் கிரயம் வாங்கியவுடன் அனைத்து ஆவணங்களும் என் பெயரில் மாற்றப்பட்டது. 1 ம் வாதி முனியப்பன் மற்றும் அவரது அண்ணன் முருகன் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2014 ம் ஆண்டு முருகனோ அல்லது அவரது மகள் புஷ்பவள்ளியோ தாவா சொத்தில் உள்ள இரும்பு தளவாடங்களை நானும் எனது மாமனாரான 1 ம் பிரதிவாதியும் பூட்டை உடைத்து திருடிவிட்டதாக புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. வாதிகள் எனது மாமனரான 1 ம் பிரதிவாதியிடம் ரூபாய் 2 இலட்சம் கடனுக்காக தாவா சொத்தை அடமானம் எழுதி கொடுத்தார்கள் என்றால் இல்லை. 1 ம் பிரதிவாதி வாதிகளிடம் அவர்கள் படிப்பறிவில்லாதவர்கள் என்ற காரணத்தினால் அடமான பத்திரத்திற்கு பதிலாக பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கி கொண்டார் என்று சொன்னால் இல்லை. அந்த பொது அதிகார பத்திரத்தை தவறாக பயன்படுத்தி தான் தாவா சொத்தை 1 ம் பிரதிவாதி எனக்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக

தான் நானும், 1ம் பிரதிவாதியும் கிரய ஒப்பந்தம் பதிவு செய்தும், இரத்து செய்தும் உள்ளோம் என்று சொன்னால் இல்லை. வாதிகள் அடமானம் வைத்த தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் வா.சா.ஆ.8 கிரய பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 கிரய பத்திரம் என் பெயரில் உள்ளதே தவிர எனக்கு தாவா சொத்து பற்றிய எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியும். அவ்வாறு தாவா சொத்து பற்றிய விவரமும் எனக்கு தெரிந்திருந்தால் மேற்படி சொத்தை நான் கிரயம் பெற்றிருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெறுவதற்கு ரூபாய் 9,50,000/- கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் வாதிகளிடம் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் என் பெயரில் உள்ள வா.சா.ஆ.8 கிரய பத்திரத்தை இரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.10.24 20:15:21 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.